**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 27 | of | 2010 |
|---|---|---|---|---|

**2028-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **தாமோதரன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-08.04.2026**

**வா.சா.-**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

என் தகப்பனார் பால் வியாபாரத்தில் வந்த பணத்தை கொண்டு சொத்துக்களை வாங்கினார். மேலும் திருவான்மியூர் சொத்தில் இருந்து என் தகப்பனார் வாடகை வசூலித்து வந்தார். அந்த திருவான்மியூர் சொத்தை விற்று என் தகப்பனார் அவர் பெயரில் ஈஞ்சம்பாக்கம், தாம்பரத்தில் சொத்துக்கள் வாங்கினார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் தாம்பரத்தில் சொத்து எதுவும் வாங்கவில்லை. வழக்கு சொத்தில் வந்த பாகத்தை கொண்டு என் தகப்பனார் பெயருக்கு ஈஞ்சம்பாக்கத்தில் சொத்து வாங்கினேன். கிரய பத்திரத்தில் நான் தொகை கொடுத்து என் தகப்பனார் பெயருக்கு

வாங்குவதாக சொல்லப் படவில்லை என்றால் சரிதான். சந்தேகத்தின் பேரில்தான் வரதராஜன் பெயரில் எழுதி வைக்கப்பட் செட்டில்மண்ட் செல்லாது என்று சொல்கிறேன். செட்டில்மன்ட் பத்திரத்தை ரத்து செய்ய என் தகப்பனார் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் அவ்வாறு செட்டில்மன்ட் பத்திரம் ஏற்பட்டது என் தகப்பனாருக்கே தெரியாது. அப்போது என் தகப்பனார் இறக்கும் தருவாயில் இருந்தார். வரதராஜன் மீது வழக்கு தாக்கல் செய்யும் போது வாடகைதாரர் மீதும் வழக்கு போடப்பட்டுள்ளது. என் தகப்பனார் மீது நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் இறந்த பிறகு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் அதை மறுக்கிறேன். 1ம்பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் பெற முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்கு தீர்பாணைக்குரியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**- நான் ஒரு நாள் என் தகப்பனாரின் உடலை அப்படியே வைத்திருக்கும் படி சொன்னேன் ஆனால் அவர் பல நாட்களாக நோய்வாய் பட்டு இருந்ததால் அன்றைய தினமே ஈம கிரயம் செய்துவிட்டார்கள்.

**மறுவிசாரணை -இல்லை.**

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu